**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF, SATHANKULAM**

| | | | |
|---|---|---|---|
| **D.W.2** | **பெயர் : திரு.மிக்கேல் ராஜரீகம்**<br>**த/பெ : திரு. சந்தனம்** | **O.S.No.59/2024** | **29.06.2026** |

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, வாதி தரப்பில் பி.வா.சா.2 ன் குறுக்கு விசாரணை)

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் பிரதிவாதி எனது உடன்பிறந்த தம்பி என்று சொன்னால் சரிதான். வழக்கின் 1ம் தபசில் சொத்து வாதியின் தகப்பனாருக்கு அவரது சகோதரர் சிலுவைதங்கம் என்பவர் கடந்த 01.06.1975 தேதியில் எழுதிக் கொடுத்த பாகவிடுதலை பத்திரம் மூலம் பாத்தியப்பட்டது என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. வழக்கின் 2ம் தபசில் சொத்து வாதியின் தகப்பனாருக்கு அவரது சித்தப்பா யோவான் நாடார் குமாரர் லூர்து நாடார் 15.02.1993 தேதியில் எழுதிக் கொடுத்த பாகவிடுதலை பத்திரம் மூலம் பாத்தியப்பட்டது என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 2 சொத்துக்களும் வாதியின் தகப்பனார் காலமானபிறகு வாதிக்கு 30.04.2021 அன்று ஏற்பட்ட குடும்ப ஏற்பாட்டின் அடிப்படையில் வாதிக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்து வாதியின் அனுபவத்தில்தான் உள்ளது என்று சொன்னால் சரியல்ல, எனது அண்ணனின் அனுபவத்தில் உள்ளது. மேற்படி சங்கதிகளை நான் பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

வழக்கு சொத்தின் எல்லைமால்களை எனக்கு தெரியுமா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. சொத்து எனது அனுவத்தில் இல்லை

என்பதால்தான் எனக்கு எல்கைமால்கள் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தைப் பொறுத்து சர்வேயர் வைத்து அளந்தோமா என்றால் அதற்கான தேவை ஏற்படவில்லை. பிரதிவாதி எனது சகோதரர் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய்சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd)M. Siva Rajesh, 29/06/2026
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.